GICHD



# இலங்கையில் மிதிவெடி அகற்றும் பணியில் பெண்களை ஈடுபடுத்துவதால் ஏற்படும் சமூக பொருளாதாரப் பாதிப்புகள்

## அறியப்பட்ட முக்கிய விடயங்கள்

மனிதாபிமான மிதிவெடி அகற்றும் பணிக்கான ஜெனீவா சர்வதேச மையம்
இலங்கையில் மிதிவெடி அகற்றும் பணியில் பெண்களை ஈடுபடுத்துவதால் ஏற்படும் சமூக பொருளாதாரப் பாதிப்புகள்: அறியப்பட்ட முக்கிய விடயங்கள், GICHD, ஜெனீவா, ஜூன் மாதம் 2020
© GICHD

இந்த ஆய்வு GICHD யிலுள்ள மரியன் புரோவென்ச்சராலும் லோரா பிஸ்கக்லியாவாலும் நடத்தப்பட்டது.

கனேடிய அரசாங்கத்தின் நிதி உதவியால் இந்த வெளியீடு சாத்தியமானதால் அவர்களுக்கு நன்றி.

இந்த வெளியீட்டின் உள்ளடக்கம், அதன் விளக்கக்காட்சி மற்றும் பயன்படுத்தப்பட்ட பெயர்க்குறிப்புகள் எந்தவொரு நாடு, பிரதேசம் அல்லது ஆயுதக் குழுவின் சட்டபூர்வமான நிலை குறித்தோ அல்லது அதன் எல்லைகள் அல்லது எல்லைகளின் வரம்பு குறித்தோ எந்தவொரு கருத்தையும் மனிதாபிமான மிதிவெடி அகற்றும் பணிக்கான ஜெனீவா சர்வதேச மையம் (GICHD) வெளிப்படுத்துவதாக அமையாது. பிரசுரத்தின் எல்லா உள்ளடக்கங்களுக்கும் GICHD யே முழுப் பொறுப்பாகும்.

# ஆய்வு

இலங்கையில் மிதிவெடி அகற்றும் பணியில் பெண்களை மற்றும் ஆண்களை ஈடுபடுத்துவதால் ஏற்படும் சமூக பொருளாதாரப் பாதிப்புகள் பற்றி இந்த ஆய்வு பார்க்கும். தேசிய மிதிவெடி அகற்றும் செயல்பாட்டு மையத்துக்கும் (NMAC) நாட்டின் ஏனைய பங்கு நிறுவனங்களுக்கும் (HALO நம்பிக்கை மையம், மிதிவெடிகள் குறித்த ஆலோசனை குழாம், SHARP மற்றும் DASH) கருத்துக்கணிப்பில் பங்குக்கொண்ட 226 மிதிவெடி அகற்றுபவர்களுக்கும் (113 பெண்களும் 113 ஆண்களும்) நேர்காணலில் பங்குக் கொண்ட 103 குடும்பங்களுக்கும் சமூகப் பிரதிநிதிகளுக்கும் (69 பெண்களும் 34 ஆண்களும்) அவர்களது ஆதரவுக்கு நன்றி கூறுகின்றோம். மேலும் 13 தனிப்பட்ட கலந்துரையாடல்கள் (9 பெண்களும் 4 ஆண்களும்) நடத்தப்பட்டன.

வளங்களை தன்னகப்படுத்தும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் தகைமைகள் மற்றும் சேவைகளுக்கான அணுகல் போன்ற மாற்றங்களை மிதிவெடி அகற்றும் பணி அவர்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தியது பற்றி அதில் ஈடுபட்டிருந்த ஆண்களிடமும் பெண்களிடமும் கலந்தாலோசனை செய்யப்பட்டது. முன்னிலும் பார்க்க மிதிவெடி அகற்றுவதில் ஈடுபட்டிருந்த பெண்களின் தீர்மானங்கள் எடுக்கும் மனோபாவத்திலும் சுயமதிப்பீட்டிலும் வெகுவான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாயெனவும் ஆய்வும் முன்னெடுக்கப்பட்டன. மிதிவெடி அகற்றுவதில் ஈடுபடும் பெண்கள் குறித்தான சமூகக் கருக்களையும் சமூகத்தினுள் பாலினம் சார்ந்த வரைமுறைகளையும் ஆராயும் பொருட்டு குறிப்பிட்டோரின் குடும்ப அங்கத்தவரும் சமூக பிரதிநிதிகளும் செவ்வியில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

# சூழ்நிலை

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 10 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக (1983-2009) நீடித்த ஆயுத மோதல், இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான வெற்றியை அறிவித்தபோது முடிவுக்கு வந்தது.[1]

உள்நாட்டுப் போருக்குப் பிறகு, இலங்கை விரைவான பொருளாதார மீட்சியையும் நிலையான வளர்ச்சியையும் அடைந்தது. இது மக்களின் பொருளாதார நல்வாழ்வில் நிலைமையை தோற்றுவித்தது. இருப்பினும் மோதல் இடம்பெற்ற இலங்கையின் வடகிழக்கு பகுதிகள் புதைந்திருந்த வெடிப்பொருட்களால் வெகுவாக மாசுபட்டிருந்தது. 2010 ஆண்டளவில் மிதிவெடிகளால் மாசுப்பட்டிருந்த 506 சதுர கிலோமீட்டர் நிலப்பிரதேசத்தை 2018 ஆண்டாகும் போது 25.8 சதுர கிலோமீட்டராக குறைத்து நிலப்பகுதிகள் பாதுகாப்பானவையாக விடுவிக்கப்பட்டன.[2] ஜூன் மாதம் 2017 இல், கிழக்கு மாகாணத்தில் மட்டகளப்பு மாவட்டம் மிதி வெடிகள் இல்லாத பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட முதலாவது மாவட்டமாகும்.[3] 2020 ஆம் ஆண்டின் ஆரம்பக்கட்டத்தில் கூட வெடிபொருட்களால் பாதிக்கட்ட நாடுகளில் ஒன்றாக, குறிப்பாக வட மாகாணம் குறிப்பிடப்படுகிறது.[4]

மாகாணமொன்றின் சமூக பொருளாதார வளர்ச்சியில்[5] வெடிப்பொருட்களால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகள் முக்கிய செல்வாக்கு செலுத்தும். மாசுபாடானது நாட்டிற்குள் இடம்பெயர்ந்தோரையும் (ISPs) மற்றும் அகதிகளையும் மீளக்குடியமர்த்துவதற்கு வாய்ப்புகளை மட்டுப்படுத்தியுள்ளது. மேலும் இது குடியிருப்பாளர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அடிப்படை சேவைகள் மற்றும் உள்கட்டமைப்புகளை அணுகுவதற்கும் தடையாக உள்ளது. ஏற்கனவே ஏறக்குறைய முப்பது ஆண்டுகால மோதல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் ஒரு பகுதியில், பெருமளவில் புதைந்துண்ட வெடிப்பொருட்களின் தொடர்ச்சியான அபாயங்கள் ஊர்வாழ் மக்களின் இனிவரும் முன்னேற்றங்களையும் வெகுவாக கட்டுப்படுத்தியுள்ளது.

1 மிதிவெடி கண்காணிப்பு. இலங்கை: மிதிவெடி அகற்றும் பணி. 2019.

2 மிதிவெடி கண்காணிப்பு. இலங்கை. மிதிவெடி அகற்றும் பணி. 2019.

3 மிதிவெடிகள் தொடர்பான ஆலோசனைக் குழாம். மிதிவெடிகளால் விடுவிக்கப்பட்ட முதாலாவது மாவட்டத்தை இலங்கை பிரகடனப்படுத்திறது. MAG மிதிவெடி அகற்றும் பணியாளர்களின் சேவைக்கு பாராட்டுகள். 2017.

4 மிதிவெடி கண்காணிப்பு. இலங்கை சுருக்கக்குறிப்பு. மிதிவெடி அகற்றும் பணி. 2019.

5 பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தின் அடிப்படையில் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் வாழ்க்கை நிலைமைகள் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட செயல்முறையாக சமூக பொருளாதார வளர்ச்சி இந்த ஆய்வறிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளது. வருமானத்தை அதிகரித்தல், வளங்களுக்கான பிரவேசத்தை அதிகரித்தல், கல்வி மற்றும் தொழில்நுட்பங்களுக்கான மேம்பட்ட பிரவேசம் போன்ற பல்வேறு காட்டிகளின் மூலம் இதை அளவிட முடியும். Ref. IGI Global. சமூக பொருளாதார அபிவிருத்தி. 2020.

இந்த சூழலில், மிதிவெடி அகற்றும் செயல்பாடுகள், தனிநபர்களின் அடிப்படை பாதுகாப்புத் தேவைகளுக்கு உத்தரவாதம் அளிப்பது மட்டுமல்லாமல்,[6] பாதிக்கப்பட்ட சமூகங்களின் மீட்பு மற்றும் முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய செயற்பாட்டு கருவியாக அமைகிறது. புதைந்துள்ள வெடிப்பொருட்களை அகற்றுவது சமூக பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு முன் நிபந்தனையாகும், ஏனெனில் இது நிலத்தை விளைத்திறனாக பயன்படுத்தவும் வீடமைப்பு மற்றும் உள்கட்டமைப்புகளை மேற்கொள்ளவும் மீள உபயோகிக்க உதவுகிறது. இதன் மூலம் நிலையான வாழ்வாதாரங்கள் மீட்டெடுக்கப்படும். இந்நிலைமை பெண்கள், சிறுவர்கள் மற்றும் ஆண்கள் வாழ, வேலை செய்ய, மற்றும் செழிக்க ஒரு பாதுகாப்பான சூழலுக்கு பங்களிக்கிறது. அதே நேரத்தில், மிதிவெடி அகற்றும் செயல்பாடுகளின் மூலம் அந்த வேலை நடைபெறும் பகுதிகளில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகின்றன. அங்கீகாரம் பெற்ற வேலைவாய்ப்புக்கான பிரவேசம் குறிப்பாக வட மாகாணத்தில் மாற்றங்களை கொண்டுவரத்தக்கது. காரணம் என்னவென்றால் குறிப்பிட்ட பிரதேசத்தில் அங்கு நிபுணத்துவம் சார்ந்த தொழில் வாய்ப்புகள் குறிப்பாக ஊர்வாழ் பெண்களுக்கு தொழில்வாய்ப்புகள் குறைவாகும்.

6 மாஸ்லோவின் தேவைகளின் படிமுறையின் பிரகாரம், பாதுகாப்புத் தேவைகளில் தங்குமிட வசதிகள், வன்முறை இல்லாத சூழ்நிலை போன்ற உடல்ரீதியான பாதுகாப்பு மற்றும் நிலையான சுற்றுச்சூழல் என்பனவும் அடங்கும். மனோதத்துவ ரீதியான மீளாய்வு. 1943.

# இலங்கையில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை

பத்து வருடங்களுக்கும் மேலாக முதல் தேசிய மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்கள் இலங்கையின் மிதிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான இலங்கை பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வேலை வாய்ப்புகள் இதனால் உருவாகியுள்ளது. NMAC நிறுவனம் மிதிவெடி அகற்றுதல் செயற்பாட்டின் அனைத்து நடவடிக்கைகளையும் அடிப்படை மட்டங்களிலிருந்து ஒருங்கிணைக்கும் செயற்பாட்டு நிறுவனமாகும்.[7] 2020 ஆம் ஆண்டளவில், அகற்றும் நடவடிக்கைகள் பின்வரும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகிறது:

| செயல்பாட்டாளரின் வகை | செயல்பாட்டாளரின் பெயர் |
|---|---|
| தேசிய அரசாங்கம் | இலங்கை இராணுவம் (SLA) |
| அரசு சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) | DASH<br>SHARP |
| சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) | மிதிவெடி அகற்றுவதற்கான ஆலோசனைக் குழாம் (MAG) |

இலங்கை இராணுவத்தைத் தவிர, ஏனைய அனைத்து நிறுவனங்களும் வரலாற்று ரீதியாக ஏராளமான பெண்களைப் பணியில் அமர்த்தியுள்ளன.[8] குறிப்பாக கூறுவோமாயின், இலங்கையில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் உலகில் ஆண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களையும் பார்க்க பெண்களின் விகிதம் மிக உயர்ந்த விகிதத்தில் உள்ளது.[9] மொத்த மிதிவெடி ஆராய்வையும் கருத்திற்கொள்ளும் போது, நான்கு செயற்பாட்டு நிறுவனங்களிலும் மொத்தமாக 1,882 மிதிவெடி அகற்றும் ஊழியர்கள் (1,356 ஆண் மற்றும் 526 பெண்கள்) இருந்தனர். ஆய்வின் போது நேர்காணலில் பங்கு கொண்ட நான்கு செயற்பாட்டு நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்களின் விகிதம் 39% ஆகும்.

7 இலங்கையின் தேசிய மிதிவெடி அகற்றும் நடிவடிக்கை செயற்திட்டம். மார்ச் மாதம் 2020 இல் ஆலோசிக்கப்பட்டது.

8 ஆராய்ச்சியின் போது, HALO நம்பிக்கை மையம் 692 ஊழியர்களை (322 பெண்கள், 370 ஆண்கள்) மிதிவெடி அகற்றுதல் செயல்பாட்டில் ஈடுபடுத்தியது. இது மொத்த ஊழியர்களில் 47% பெண் மிதிவெடி அகற்றும் ஊழியர்கள் ஆகும். MAG நிறுவனம் இலங்கையில் ஒரு நிலையான பணியை முன்னகர்த்தியது. அந்நிறுவனம் 79 பெண்களையும் 564 ஆண்களையும் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடுத்தியது. உள்நாட்டு அரசு சார்பற்ற நிறுவனமான DASH, 422 உத்தியோகத்தர்களை (110 பெண்கள், 312 ஆண்கள்), சேவையில் ஈடுபடுத்தியது SHARP இல் 125 பேர் (15 பெண்கள், 110 ஆண்கள்) இருந்தனர்.


9 மொத்த ஆய்வு நடவடிக்கையையும் கருத்திற்கொள்ளும் போது, இலங்கையில் மிதிவெடி அகற்றுதல் பணியில் ஈடுபட்டோரில் 39% ஆனோர் பெண்களே.

# நேர்காணலில் பங்குப்பெற்றோரின் அமைப்பு

தரவுகளின் படி, மிதிவெடி அகற்றுவதில் ஈடுபட்டிருந்த பெண் மற்றும் ஆண் இருபாலாரும் சுமார் நான்கு ஆண்டுகளாக இந்த பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர். நேர்காணல் செய்யப்பட்ட பெண்களில் 15% ஆனோர் அங்கவீனர்களாக குறிப்பிட்டக்கூடியவர்கள். ஆண்களில் 10% ஆனோரே அங்கவீனர்கள். மேலும் இரண்டு பெண் மிதிவெடியகற்றுபவர்கள் மிதிவெடியில் தப்பிப்பிழைத்தோர் என்று தெரிவித்தனர்.


சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நேர்காணல் செய்யப்பட்ட 50% பெண் மிதிவெடியகற்றுபவர்கள் அவர்கள் மட்டுமே தங்கள் வீடுகளுக்கு வருமானம் ஈட்டியவர்கள். பத்தில் ஒன்பது பேர் தங்கள் பங்காளர்களை விட அதிக வருமானம் ஈட்டியதாகக் கூறப்படுகிறது. கணக்கெடுப்பின் போது பெரும்பான்மையான பெண் மிதிவெடியகற்றுபவர்கள் தங்கள் வீடுகளின் முதன்மை வருமானம் ஈட்டியவர்கள் என்பதை இது குறிக்கிறது.

பெண் மிதிவெடியகழ்வாளர்கள் தங்கள் வீடுகளுக்கு முதன்மை வருமானம் ஈட்டியவர்கள்





மிதிவெடியகற்றுதல் பணியில் இணைவதற்கு முன்னர், மிதிவெடியகற்றுபவர்களாக பணியாற்றிய மூன்று பெண்களில் ஒருவருக்கு இதற்கு முன்னர் எந்த வருமானமும் இருக்கவில்லை. ஆண்களைப் பொறுத்தவரையில் இந்நிலைமை 20 இல் ஒன்றாகும். பெண்களுக்கான சராசரி வருமானம் மாதம் ஒன்றிற்கு 9,580 ரூபா முதல் 34,447 ரூபா வரை அதிகரித்துள்ளது. இது வருடாந்த வருமானம் 3.5 மடங்கிற்கும் மேலாக அதிகரிப்பதைக் குறிக்கிறது. ஆண்களுக்கான சராசரி சம்பளம் ஒரு மாதம் 19,455 ரூபாவிலிருந்து 33,824 ரூபா வரை உயர்ந்தது, இது 1.7 மடங்கான அதிகரிப்பாகும்.

வருமானம் பெறும் மிதிவெடியகற்றுதல் பணியாளர்கள் மிதிவெடியகற்றுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டதற்கு முன்னரும் பின்னருமான நிலைமைகள்





மிதிவெடியகற்றுதலுக்கு முன்னும் பின்னருமான மிதிவெடியகற்றுதல் ஊழியர்களின் சராசரி சம்பளம் ரூபாவில்



# வளங்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளுவதற்கான பிரவேசத்தில் அதிகரிப்பு


வளங்கள் மற்றும் சேவைகளுக்கான பிரவேசமும் உரித்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் மிதிவெடி அகற்றும்பணியின் காரணமாக ஏற்பட்ட நன்மைகளாக இருக்கலாம்.

கையகப்படுத்தப்பட்ட வளங்கள் பற்றிய மிதிவெடியகற்றுபவர்களின் அறிக்கையிடல்





ஐந்து பெண் மற்றும் ஆண் மிதிவெடியகற்றுபவர்களில் ஒருவருக்கு நிலம் வாங்க முடிந்தது. ஆண்களில் மூன்றில் ஒரு பகுதிக்கும் பெண்களில் பாதிப் பேருக்கும் சொத்துக்களைப் பெற முடிந்தது. அகற்றும்பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களில் அனேகமானோர் தங்கள் வேலைவாய்ப்பின் மூலம் தங்கள் வீடுகளில் மின்சார இணைப்பைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. அகற்றும்பணியில் ஈடுபட்டுள்ளதால் பெற்ற வருமானம், குறிப்பாக கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய சாத்தியமானது. பெண் மற்றும் ஆண் அகற்றும்பணியில் ஈடுபட்டுள்ள இருசாராரும் நிதி சேவைகளுக்கான பிரவேசம் அதிகரிப்பதாக தெரிவித்தனர். 42% பெண்கள் மற்றும் 37% ஆண்கள் வங்கி கணக்குகளை திறந்தனர். 42% பெண்கள் கடன்களைப் பெறுவதாகக் கூறினர்.

## வளங்களை அணுகுவதற்கான வருமானத்தைத் தெரிவிக்கும் அகற்றும்பணியில் ஈடுபடுவோர்





ஐந்து ஆண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களில் மூன்று பேரும், ஐந்து பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களில் நான்கு பேரும் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட பின்னர் அவர்களின் கொள்வனவு செய்யும் திறன் அதிகரித்துள்ளது அல்லது வெகுவாக அதிகரித்தும் உள்ளதென ஒப்புக்கொண்டனர். 89% பெண் மற்றும் 77% ஆண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களும் தங்கள் வேலைவாய்ப்பின் நேரடி பெறுபேறாக உணவுக்கு அதிக பிரவேசம் இருப்பதாக தெரிவித்தனர். இரு பாலினத்தவர்களிடமும் பதிலளித்த பத்து பேரில் ஆறு பேர், நீர்வழங்கலுக்கான வசதி அதிகரிப்பதாக தெரிவித்தனர்.

## கல்விக்கான பிரவேசத்தில் அதிகரிப்பு குறித்து தெரிவிக்கும் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள்




கல்விக்கான பிரவேசத்தில் இன்னொரு பாதிப்பு இருந்தது. பத்து பெண்களில் ஏழு மற்றும் பத்து ஆண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களில் ஆறு பேர் தங்கள் குழந்தைகள் தமது பாடசாலையில் கழித்த ஆண்டுகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பும் நிலையானத் தன்மையும் இருப்பதாக தெரிவித்தனர்.

## ஆரோக்கிய பராமரிப்பு சேவைகளுக்கான பிரவேசத்தை அதிகரிப்பதாக தெரிவிக்கும் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள்




இறுதியாக, கணக்கெடுப்பு பெண் மற்றும் ஆண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களின் சுகாதார சேவைகளை பற்றி ஆராய்வதில் ஆர்வமாக இருந்தது. மிக முக்கியமாக, 75% பெண்கள் மற்றும் 81% ஆண்கள் சுகாதார சேவைகளுக்கான பிரவேசத்தில் அதிகரிப்பு அல்லது வெகுவான அதிகரிப்பு காணப்பட்டுள்ளதை குறிப்பிட்டனர். சிகிச்சைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கான பிரவேசம் முறையே 74% மற்றும் 77% அதிகரித்துள்ளது.

## வேலையில் சமத்துவம் ஆனால் வீட்டிலே சுமைகளைத் தாங்குதல்

மிதிவெடி அகற்றும் நடவடிக்கை பணிகள் பெண்கள் மற்றும் ஆண்கள் இணைந்து பணியாற்றும் நன்மைகள் மற்றும் வருமானங்களைக் கொண்ட ஒரே ஒரு துறையாக கருதப்பட்டது. மிதிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது தொழில் நன்மைகள், மற்றவற்றுடன் ஒப்பிடுகையில் சரியான நேரத்தில் செலுத்தப்படுவதுடன் சமமாகவும் பதவி உயர்வுகளுக்கான பிரவேசத்துடன் கிடைக்கப்பெறும்.

பெண்கள் பொதுவாக ஊதியம் கிடைக்கும் வேலைவாய்ப்புக்கும் மேலதிகமாக ஊதியமில்லாத வீட்டு வேலைகளையும் மேற்கொள்வார்கள். பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் கணிசமான இரட்டைச் சுமையை அனுபவிப்பதாகக் கூறினர்.[10] அதேவேளை இளைய குழந்தைகளை தனியாக வீட்டில் விட்டு வேலைக்குச் செல்வது ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாக இருந்தது. மேலும் வேலை செய்யும் கணவருடன் கூடிய பெண்களும் குழந்தைகளுடன் வீட்டில் தங்குவதற்கு பதிலாக தொழிலுக்கு செல்லுதல் குடும்பத்துக்குள் எதிர்மறையாக எண்ணங்களை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டனர்.


10 ‘இரட்டைச் சுமை’ என்ற சொல், உலகெங்கிலும் உள்ள பல பெண்கள் தொழிலாளர் சந்தையில் முழுநேர வேலை செய்கிறார்கள் என்பதையும், வீட்டிலும் சமூகத்திலும் கணிசமான அளவு ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளுக்கும் பொறுப்பாக இருப்பதையும் குறிக்கிறது.

# மிதிவெடி அகற்றும் நடவடிக்கைக்கு அப்பால் பாலின எண்ணப்பாடுகளை மாற்றுதல்

மிதிவெடி அகற்றும் பணியில் பணியாற்றியதிலிருந்து பெண்கள் தங்கள் தன்னம்பிக்கை, தமது பெறுமதி மற்றும் மற்றவர்களுடனான உறவுகளில் சமூகம் என மிகவும் சாதகமாக விடயங்கள் ஏற்பட்டமைக்கு வலுவான சான்றுகளை இந்த ஆய்வு சேகரிக்க முடிந்தது. 95% பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் தங்கள் வேலைக்குப் பின்னர் தம்மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பதை வெளிப்படுத்தினர். பொருளாதார ரீதியாக வலுவாக நிலைமையை அடையவும், அவர்களது குடும்பங்களை ஆதரிக்கவும் முடிந்தது. அதேபோல் புதிய திறன்களைக் கற்றுக்கொள்வதற்கும் அவர்களின் சமூக பாதுகாப்பிற்கு பங்களிப்பு செய்வதும் இந்நிலைமை ஏதுவாக இருந்தது.


மொத்தம் 86% பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் வீட்டிலேயே தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் நம்பிக்கையில் அதிகரித்த அல்லது வெகுவாக அதிகரித்த தன்மையையும் வெளிப்படுத்தினர்.

பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் தமது குடும்ப வாழ்க்கையில் தமது கருத்துக்களை முன்வைக்கும் தன்னம்பிக்கை




பத்து பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களில் ஒன்பது பேர் தங்கள் வேலைவாய்ப்பின் மூலம் தொடர்ந்த நிதி சுதந்திரத்தின் அதிகரிப்புக்கும் நிலையான தன்மைக்கும் இத்தொழில் ஏதுவாக அமைந்ததாக அறிக்கை அளித்தனர், மேலும் 94% பெண்கள் தங்கள் குடும்பங்களுக்கு நிதி ரீதியாக உதவ முடியும் என்ற நம்பிக்கையில் இருப்பதாகக் கூறினர். அதிகமானோர், பதிலளித்தவர்களில் 98% பெண்கள். ஆண்களைப் போலவே பெண்களையும் வேலைக்கு அமர்த்த முடியும் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். பலருக்கு, இது ஆண்களுடன் இணைந்து பணியாற்றிய முதல் அனுபவம். பெரும்பாலான ஆண் மற்றும் பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் இத்தொழிலினால் பெண்கள் ஊதியம் பெறுவதை சிறந்த விடயமாக கண்டனர்.

பொருளாதார சுதந்திரம் பற்றி கருத்தளிக்கும் பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள்




பெண்களைப் பற்றிய பொதுவாக எதிர்பார்ப்புகளை மாற்றுவதற்கு பெண்கள் மிதிவெடி அகற்றும் இவ்வேலைவாய்ப்பு வெகுவாக பங்களித்தது. பத்து பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களில் ஏழுக்கும் மேற்பட்டவர்களின் கருத்து என்னவென்றால், அவர்களது குடும்பத்தினர் மற்றும் சமூக உறுப்பினர்கள் மிதிவெடி அகற்றும் பணியாளர்களாக பணிபுரியும் பெண்கள் மீதும், தங்கள் குடும்பங்களை நிதி ரீதியாக ஆதரிக்கும் பெண்கள் மீதும் மிகவும் நல்ல அபிப்பிராயத்தைக் காட்டினர்.

## மிதிவெடி அகற்றுவதில் ஈடுபடும் ஆண் குடும்ப உறுப்பினர்கள் கூறியது என்னவென்றால் ஆண்களைப் போலவே அதே வேலைகளில் பணியாற்றும் தகைமை பெண்களுக்கும் உள்ளது என்பதாகும்




## பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை ஆதரிக்கும் பெண்களைப் பற்றி மேலும் சாதகமாகப் பார்க்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள்





பெண்கள் மிதிவெடி அகற்றும் பணியாளர்களாக இருக்க அவசியமான திறன்கள் மற்றும் குணங்கள் என்ன என்பதை விவரிக்கக் கேட்கப்பட்டபோது, குடும்ப மற்றும் சமூக உறுப்பினர்கள் பெரும்பாலும் பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களாக பரணமிக்க தேவை 'துணிச்சல்' என்ற வார்த்தையைப் குறிப்பிட்டார்கள். மிதிவெடி அகற்றும் பணிகளைச் செய்வதற்கு உடல் வலிமையை விட மன உறுதி மிகவும் முக்கியமானது என்று குடும்பத்தினரும் சமூக உறுப்பினர்களும் அடிக்கடி குறிப்பிட்டுக் கொண்டனர். பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் 'கண்ணியம்' மற்றும் 'சுதந்திரம்' கொண்டவர்களாகப் பார்க்கப்பட்டனர்.


# பெறப்பட்ட புதிய திறன்கள் மற்றும் இடப்பெயர்வு இன்மை

முன்னைய வேலைவாய்ப்புகளின் அனுபவங்கள் மற்றும் தற்போதைய மிதிவெடி அகற்றும் நடவடிக்கைப் பணிகள் மூலம் திறன்களைப் பெறுதல் பற்றிய தரவுகளை இந்த ஆய்வு சேகரித்தது. இனிவரும் ஆண்டுகளில் இலங்கை மிதிவெடிகள் அற்ற நாடாக மாறும்போது இந்த தரவு பயனுள்ளதாக இருக்கும். மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக மிதிவெடி அகற்றும் பணியாளர் வேலையில் இணைத்துக்கொள்வதற்கு முன்னர், நேர்காணல் செய்யப்பட்ட ஆண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் முறைசாரா அன்றாட வேலைகளான கொத்து, பூச்சிடல், தையல், சமையல் மற்றும் வாகனம் ஓட்டுதல் போன்றவற்றில் பணிபுரிந்திருந்தவர்களாக கண்டறியப்பட்டது. அதேபோல் பத்து பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்களில் நான்கு பேர் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை அனுபவத்திற்கு முன்பு எந்த துறைகளில் பணியாற்றிருப்பார்கள் என்பதைக் குறிப்பிடக் கூட முடியவில்லை. மூன்றில் ஒரு பங்கு பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் தமது தற்போதைய வேலைவாய்ப்புக்கு முன்பு வருமானம் ஈட்டவில்லை என்பதால், அவர்கள் மிதிவெடி அகற்றும் பணிக்கு முன்பு அவர்கள் எந்த வேலைக்கும் பணியமர்த்தப்படவில்லை.

மிதிவெடி அகற்றும் நடவடிக்கை இல்லையென்றால் எந்த துறைகளில் அவர்கள் பெரும்பாலும் பணியாற்றப்படுவார்கள் என்றும் மிதிவெடி அகற்றும் பணியாளர்களிடம் கேட்கப்பட்டது. பதிலளித்த இரு பாலினத்தினத்திலும் பெரும்பாலோர் அவர்கள் பெரும்பாலும் விவசாயம் செய்தவர்களாகக் குறிப்பிட்டனர்.

பெண் மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் ஏனைய துறைகளில் பணியாற்றுவதற்கு காட்டிய விருப்பம்






பெரும்பான்மையான மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் தங்கள் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையின் மூலம் பல்வேறு திறன்களைப் பெற்றதாகக் கூறப்படுகின்றது. பெறப்பட்ட திறன்கள் பின்வருமாறு:

| திறன்கள் | பெண் | ஆண் |
|---|---|---|
| குழு வேலை | 95% | 97% |
| தலைமைத்துவம் | 98% | 85% |
| முதலுதவி | 90% | 90% |
| நிர்வாகமும் நேர முகாமைத்துவமும் | 90% | 90% |
| தொடர்பாடல் | 90% | 90% |
| மொழி ஆளுமை, குறிப்பாக ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி தேர்ச்சி | 65% | 81% |
| கணினி சார்ந்த திறன்கள் | 50% | 60% |

இடம்பெயர்வுக்கு பின்னர் எதிர்கால வேலைவாய்ப்புக்கான சாத்தியக்கூறுகள் குறித்த தரவுகளை தெரிவிக்க முடியும். குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பரவலான வேலை வாய்ப்புகள் இல்லாத நிலையில், வேலைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் பெண்களை வீட்டுத் தலைவர்களாக கொண்ட குடும்பங்கள் பொருளாதார பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக எதிர்வுக்கூறப்பட்டது. அவர்களின் குடும்ப நிலைமைகளைத் தக்கவைத்துக்கொள்ள, இந்நிலைமை சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலைக்கு தள்ளப்படவும் கூடும். பெண்கள் மற்றும் ஆண்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றவும் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தவும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். பாலின ரீதியாக வழங்கப்படும் முக்கியத்துவங்கள் இல்லாமல் போகும் தருணங்களும் வேலையின்மையுடன் ஏற்படலாம்.

**மனிதாபிமான மிதிவெடியகற்றலுக்கான ஜெனீவா சர்வதேச மையம் (GICHD)**
மைசன் டி லா பைக்ஸ், டவர் 3, செமின் இயூஜின்-றிஜட் 2C
தபால் பெட்டி இல. 1300, CH – 1211 ஜெனீவா 1, சுவிஸர்லாந்து
HYPERLINK "mailto:info@gichd.org" \ info@gichd.org
gichd.org